# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரி (திருத்தம்)

**2008 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரால் 2013, மாச்சு மாதம் 19 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2013, பெப்புருவரி மாதம் 26 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ *232 ஆம் சட்டமூலம்* ]

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 3.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

2-PL 007120-650 (2013/03)

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரி (திருத்தச்) சட்டமூலம்**

***வாசகம் 2*** : *இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2008 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட் டொகுதிக் கல்லூரிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனாவது பணியாட்டொகுதிக் கல்லூரியின் முகாமைச் சபையில் களனி பல்கலைக் கழகத்தின் துணை வேந்தருக்குப் பதிலாக ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரை உள்ளடக்குவதற்குமாகும்.*

***வாசகம் 3*** : *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனாவது 2 ஆம் வாசகத்தால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையதுமாகும்.*

**பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்**
**டொகுதிக் கல்லூரி (திருத்தம்)**

*ச.வ.ஓ. 17/2012*

## 2008 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

***1***. இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின்    ஆம் இலக்க, பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2008 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***2***. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2008 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரி சட்டத்தின் 7 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

"(ஊ) ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர்;"

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***3***. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(ஆ) ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் ;"

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

***4***. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

2-PL 007120 -225 (2013/02)

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*